✱ உடல்நலக்குறைவு, சாலை விபத்தில் 7 போலீசார் மரணம் ✱ மின்சாரம் தாக்கி 8 பேர் உயிரிழப்பு

15 பேர் குடும்பங்களுக்கு எடப்பாடி ரூ.45 லட்சம் உதவி

சென்னை, டிச.29– உடல்நலக்குறைவு, சாலை விபத்தில் உயிரிழந்த 7 போலீசார் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 8 பேர் என 15 பேர் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சென்னை பெருநகர காவல், வியாசர்பாடி காவல் நிலைய போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த பி. பொன்னுசாமி சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்; சென்னை பெருநகர காவல், ஆவடி காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த ஏ. சௌரியப்பன் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், கூமாபட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த உமா மகேஷ்வரன் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார் என்ற செய்தியையும்; தஞ்சாவூர் மாவட்டம், தமிழ் பல்கலைக் கழக, காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த வ. கார்மேகம் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சாலை விபத்து

திருவாரூர் மாவட்டம், தேவங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த கே. ஸ்ரீதர் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்; விழுப்புரம் மாவட்டம், வரஞ்சரம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த எஸ். பி. வெங்கடேசன் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோவைப்புதூர், தமிழ்நாடு சிறப்பு காவல் படை4 –ம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த ஆர். கதிரேசன் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்தைச் சேர்ந்த சாமிவேல் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கண்டமனூர் உள்வட்டம் பகுதியைச் சேர்ந்த (லேட்) முருகன் என்பவரின் மனைவி முனியம்மாள் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், புதுசுக்காம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அருண் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஜெயராமன் என்பவரின் மனைவி ஆச்சி மற்றும் சண்முகம் என்பவரின் மனைவி சரிதா ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்; சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், கொருக்குப்பேட்டை, மீனாம்பாள் நகரைச் சேர்ந்த தங்கவேல் என்பவரின் மகன் சிவலிங்கம் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், கிண்டி, மடுவாங்கரையைச் சேர்ந்த நாராயணசாமி என்பவரின் மகன் பாஸ்கர் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த ராமசாமி என்பவரின் மகன் பெரியசாமி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தலா ரூ.3 லட்சம்

இந்த நிகழ்வுகளில் உயிரிழந்த காவலர்கள் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த இந்த 15 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தியாகதுருகம் ஒன்றியம் நின்னையூர் கிராமம் முதல் கூத்தக்குடி வரையிலான ரூபாய் 84 லட்சம் மதிப்பில் நபார்டு திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்கும் பணிகளை முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் வெ.அய்யப்பா போமி பூஜைகளை செய்தார். சட்டமன்ற உறுப்பினர் அ. பிரபு பணிகளை தொடங்கிவைத்தார்.

பிரதமர் நரேந்திரே மோடி 22–ந் தேதி ராமேஸ்வரம் வருகை :ராமாயண சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்பு

ராமேஸ்வரம்,டிச.29– ராமாயண சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி வருகிற 22–ந் தேதி ராமேஸ்வரம் வர உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் மொராரி பாபு. புகழ் பெற்ற ஆன்மீகவாதி. இவர் வருகிற 20ந் தேதி முதல் 27ந் தேதி வரை ராமேசுவரத்தில் "ராம் கதா" (ராமாயண சொற்பொழிவு) நடத்துகிறார். இதில் குஜராத் மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ராமாயண சொற்பொழிவில் பங்கேற்குமாறு பிரதமர் மோடி, தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மொராரி பாபு அழைப்பை ஏற்று பிரதமர் மோடி வருகிற 22ந் தேதி ராமேஸ்வரம் வர உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

அன்று காலை டெல்லியில் இருந்து தனி விமானத்தில் மதுரை வரும் மோடி அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் மண்டபம் வருகிறார். தொடர்ந்து காரில் ராமேஸ்வரம் செல்கிறார். ராமாயண சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு அன்று மாலையே மோடி டெல்லி திரும்புகிறார். மோடியின் வருகை குறித்த தகவல் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

மொராரி பாபுவின் சொற்பொழிவில் மோடியின் உறவினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

பலுசிஸ்தான் மாகாணத்தைப் பிரிக்க இந்தியா சதி திட்டம்: தீவிரவாதி ஹபீஸ் சயீத் பேச்சு

இஸ்லாமாபாத்,டிச.29– பாகிஸ்தானை ஏற்கெனவே இரண்டு பகுதியாக இந்தியா உடைத்தது, தற்போது, பலுசிஸ்தானையும் பிரிக்கத் திட்டம் தீட்டுவதாக தீவிரவாதி ஹபீஸ் சயீத் குயற்றம்சாட்டியுள்ளான்.

ஜமாத் உத் தாவா இயக்கத்தை நடத்திவரும் ஹபீஸ் சயீத், 'மில்லி முஸ்லிம் லீக்' பெயரில் அரசியல் கட்சியை பாகிஸ்தானில் தொடங்கியுள்ளார். கட்சியின் லாகூர் அலுவலகத்தை அண்மையில் திறந்துவைத்த ஹபீஸ் சயீத், பாகிஸ்தான் ஆட்சியாளர்களை சரமாறியாக குற்றம் சாட்டியுள்ளார்.

''பாகிஸ்தான் அரசு இந்தியாவை எதிர்ப்பது போல, போக்கு மட்டுமே காட்டி வருகிறது. ஆனால், உண்மையில் இந்தியாவை சமாதானப்படுத்தவே பாகிஸ்தான் முயல்கிறது. பாகிஸ்தானை ஆட்சி செய்யும் முஸ்லிம் லீக், பாகிஸ்தானுக்கு எதிரானது ஆகும்.

பாகிஸ்தானுடன் காஷ்மீர் மாநிலத்தை இணைக்க வேண்டுமென்று ஜின்னா விரும்பினார். இங்கே இருப்பவர்கள் ஜின்னாவின் கொள்கையைப் பின்பற்றவில்லை. ஜின்னாவின் எண்ணத்துக்கு விரோதமாகவே செயல்படுகிறார்கள். முஸ்லிம் லீக் கட்சி போலியாக செயல்படுகிறது.

இந்திய பிரதமர் மோடி, பாகிஸ்தானுக்குள்ளேயே தனக்கென்று ஒரு ராணுவத்தை உருவாக்குகிறார். முதலில் பாகிஸ்தானில் இருந்து கிழக்கு பாகிஸ்தானை இந்தியா பிரித்தது.

தற்போது, பலுசிஸ்தான் மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்தியா செயல்பட்டு வருகிறது'' என்று ஹபீஸ் சயீத் கூறியுள்ளார்.

சிவகாசியில் 4–வது நாளாக பட்டாசு ஆலைகள் மூடல் : ரூ.15 கோடி வர்த்தகம் பாதிப்பு

சிவகாசி,டிச.29– விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு ஆலைகளின் வேலை நிறுத்தம் இன்று 4வது நாளாக தொடருகிறது. தொடர் வேலை நிறுத்தம் காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 15 கோடி வரை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு வெடிப்பதால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே நாடு முழுவதும் பட்டாசு உற்பத்திக்கு தடை விதிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் பட்டாசு உற்பத்தி குறித்து மத்திய, மாநில அரசுகள் பதில் அளிக்க உத்தரவிட்டுள்ளது.

பட்டாசு உற்பத்திக்கு தடை விதிக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கை விரைந்து முடிக்கக் கோரியும், மத்திய அரசு சுற்றுச்சூழல் விதியில் திருத்தம் கொண்டுவரக் கோரியும் விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள பட்டாசு ஆலைகள் கடந்த 26 ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இதன் காரணமாக 860 க்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் மூடப்பட்டுள்ளன. 3 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இன்று 4வது நாளாக வேலை நிறுத்தம் தொடருகிறது. இந்த நிலையில் அகில இந்திய பட்டாசு சங்க கூட்டமைப்பின் மாநாடு சிவகாசியில் நடந்தது. இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பட்டாசு விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பட்டாசு விற்பனைக்கு தடை வழக்கில் தமிழக அரசு தன்னையும் ஒரு பிரதிவாதியாக நினைத்துக் கொள்ள வேண்டும். சுற்றுச்சூழல் விதியில் திருத்தம் கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வேலை நிறுத்தம் குறித்து பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்க பொதுச்செயலாளர் மாரியப்பன் கூறுகையில், பட்டாசு மற்றும் அதனைச் சார்ந்த உப தொழில் கூட்டமைப்பு சங்கத்தினர் பட்டாசு தடை வழக்கில் தங்களையும் பிரதிவாதிகளாக சேர்க்க கோரி உச்சநீதிமன்றத்தில் விரைவில் மனுத்தாக்கல் செய்ய உள்ளனர்.

மேலும் பட்டாசு உற்பத்தியாளர்களின் கோரிக்கையை வலியுறுத்தி பிரதமர் மோடி, மத்திய வர்த்தக அமைச்சர் சுரேஷ் பிரபு, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஹர்சவர்த்தன் ஆகியோருடன் முறையிட உள்ளோம். தமிழக முதல்வரையும் இது தொடர்பாக சந்திக்க உள்ளோம் என்றார்.

பட்டாசு உற்பத்தியாளர்களின் தொடர் வேலை நிறுத்தம் காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 15 கோடி வரை வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பட்டாசு தொழிலாளர்கள் கூறுகையில், தீபாவளிக்கு பின் பட்டாசு ஆர்டர்கள் அதிகளவில் வரும் என்று எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் திடீரென்று பட்டாசு உற்பத்திக்கு தடை கேட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளதால் ஆர்டர்கள் கொடுக்க தயக்கம் காட்டி வருகின்றனர். வேலை நிறுத்தத்தால் வருமானம் இன்றி குடும்பம் நடத்தவே சிரமமாக உள்ளது என்றனர்.

ஜெயலலிதா சிகிச்சை வீடியோவில் சந்தேகம் : நடிகர் ஆனந்தராஜ் பேட்டி

சென்னை,டிச.29– ஜெயலலிதா சிகிச்சை வீடியோவில் சந்தேகம் இருக்கிறது என நடிகர் ஆனந்தராஜ் பேட்டி அளித்து இருக்கிறார். மேலும் இந்த வீடியோவிற்கு பின் பெரிய சதி இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆர்.கே நகர் தேர்தலுக்கு முதல் நாள் டிசம்பர் 20ம் தேதி டிடிவி தினகரன் அணியைச் சேர்ந்த வெற்றிவேல், ஜெயலலிதா அப்பல்லோவில் சிகிச்சை பெறும் வீடியோவை வெளியிட்டார். இந்த வீடியோ தமிழகம் முழுக்க பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தற்போது இந்த வீடியோ குறித்து நடிகர் ஆனந்தராஜ் பேட்டி அளித்துள்ளார். அவர் தனது பேட்டியில், வெற்றிவேல் வெளியிட்ட ஜெயலலிதா சிகிச்சை வீடியோவில் சந்தேகம் இருக்கிறது. வீடியோவில், தேதி, நேரம் குறிப்பிடப்படவில்லை. இது பெரிய சந்தேகத்தை உருவாக்குகிறது என்று கூறியுள்ளார்.

மேலும் 'சிகிச்சை பெறும் வீடியோவின் பின்னணியில் உள்ள மரம் போயஸ் இல்லத்தில் உள்ளது. வீடியோவை இவ்வளவு நாள் வைத்திருந்தாலே அதில் சதி உள்ளது என்றுதானே அர்த்தம் என்றும் குற்றம்சாட்டியுள்ளார். தினகரன் குறித்து பேசிய அவர் ''தினகரன் ஆதரவாளர்கள் பலரும் கட்சியிலிருந்து நீக்கப்படலாம். தவறு செய்தவர்கள் மனம் திருந்தி அண்ணாதிமுகவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அரசியலில் நிலையில்லாமல் பேசும் தினகரன் பின் ஏன் சிலர் செல்கிறார்கள் என்று தெரியவில்லை'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜெயலலிதா மரண விசாரணை குறித்து பேசிய ஆனந்தராஜ் 'ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை ஆணையத்தின் மீது மக்கள் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். சசிகலாவிடம் ஆணையம் விளக்கம் கேட்டதற்கும், விசாரணை செய்வதற்கும் பாராட்டுக்கள்'' என்று கூறியுள்ளார்.

போலீஸ் உதவியுடன் லதா ரஜினிகாந்த் கடையை மாநகராட்சி காலி செய்யலாம் : சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை,டிச.29– சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள லதா ரஜினிகாந்த் கடையை போலீஸ் உதவியுடன் மாநகராட்சி காலி செய்யலாம் என்று ஐகோர்ட்டு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சென்னை, ஆழ்வார்பேட்டை சி.பி. ராமசாமி சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமாக கடைகள் உள்ளன. இதில் ஒரு கடையை நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா வாடகைக்கு எடுத்து 'டிராவல்ஸ் எக்சேஞ்ச் இந்தியா' என்ற பெயரில் தனியார் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இந்த கடைக்கு வாடகையாக மாதம் ரூ. 3702 செலுத்தி வந்தார். திடீரென கடை வாடகையை ரூ. 21 ஆயிரத்து 160 ஆக உயர்த்தி சென்னை மாநகராட்சி உத்தரவிட்டது. இதனை எதிர்த்து லதா ரஜினிகாந்த் சார்பில் மோகன் மேனன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் மாநகராட்சி அளித்த பதில் மற்றும் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி வைத்தியநாதன், கடை வாடகை உயர்த்தப்பட்டதை எதிர்த்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும் அவர் பிறப்பித்த உத்தரவில் கூறி இருப்பதாவது:–

பல ஆண்டுகளாக அந்த இடத்தில் தொழில் செய்து வருவதால் மாநகராட்சி வாடகையை ஏற்பதா? வேண்டாமா? என்று லதா ரஜினிகாந்த் முடிவு செய்து கொள்ளலாம். லதா ரஜினிகாந்துக்கு கடை தேவைப்படும் பட்சத்தில் ஒரு மாதத்தில் அதற்கான தொகையை செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அந்த கடையை மாநகராட்சி ஏலத்தில் விடலாம்.

ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டால் அதனை எதிர்த்து லதா ரஜினிகாந்த் நீதிமன்றத்தை நாடலாம் என்பதால், ஏலம் அறிவிக்கப்பட்ட பின்னரும் கடையை காலி செய்யாவிட்டால் காவல்துறை உதவியுடன் அவர் அனுபவித்து வரும் கடைக்குள் சென்று சென்னை மாநகராட்சி காலி செய்யலாம். இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

காஞ்சீபுரம் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தில் 1,252 நெசவாளர்களுக்கு ரூ.3¼ கோடி பொங்கல் போனஸ்

காஞ்சீபுரம், டிச. 29– காஞ்சீபுரம் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தில் 1252 நெசவாளர்களுக்கு ரூ.3 கோடியே 33 லட்சம் பொங்கல் போனசை சங்க தலைவர் ஏ.செல்வராஜ், இணை இயக்குநர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் வழங்கினார்கள்.

காஞ்சீபுரம் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கம் 22.5.1971ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு செயல்பட தொடங்கியது. தற்போது 47 ஆண்டுகளாக தொடர்ந்து லாபகரமாக செயல்பட்டு வருகிறது.

இந்த சங்கத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி பட்டு நெசவாளர்களுக்கு போனஸ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. 1,252 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.3 கோடியே 33 லட்சம் போனஸ் தொகையை சங்கத்தின் தலைவர் ஏ.செல்வராஜ், தமிழக கைத்தறித்துறை இணை இயக்குநரும், நிர்வாக இயக்குநருமான எஸ்.பிரகாஷ் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் துணைத்தலைவர் ஜி.விஸ்வநாதன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ். ரத்தினவேல், பி.சுந்தரமூர்த்தி, எம்.வரதராஜன், ஆர்.காமாட்சி, ஆர்.புனிதா மற்றும் திரளானோர் கலந்துகொண்டனர்.

முடிவில் சங்க மேலாளர் டி.ரவி நன்றி கூறினார்.

சீருடைப் பணியாளர் தேர்வு உதவி மையம்: காஞ்சீபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு திறந்து வைத்தார்

காஞ்சீபுரம், டிச. 29– காஞ்சீபுரத்தில் சீருடைப் பணியாளர் தேர்வுக்கான உதவி மையத்தை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தோஷ் ஹதிமானி திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 6140 சீருடைப் பணியாளர்களுக்கான தேர்வு விண்ணப்பம் இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. 2ம் நிலை காவலர், சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்புத் துறையினர் என சீருடைப் பணியாளர்களுக்கான பணியிடங்கள் தற்போது தமிழகத்தில் 6140 இடங்கள் உள்ளன. ஆண்கள், பெண்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் வகையிலான இத்தேர்வு 2018ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ளது. இந்நிலையில் இப்பணிகளுக்கான விண்ணப்பப்படிவம் இணையத்தில் பதிவேற்றம் செய்யலாம். 10ம் வகுப்பு வரை படித்தவர்கள் இந்தப் பணிகளுக்காக விண்ணப்பிக்கலாம். 10ம் வகுப்பில் தமிழ்வழிக் கல்வியில் பயின்றவர்களுக்கு 20 சதவீத முன்னுரிமை அளிக்கப்படும். திருநங்கைகள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். 18 வயது முதல் 24 வயது வரை உள்ளவர்கள் இணையத்தில் இருந்து விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்து விண்ணப்பங்களை அனுப்பலாம்.

இந்த தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு உதவிடும் வகையில் காஞ்சீபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் உதவி மையத்தை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தோஷ் ஹதிமானி தொடங்கி வைத்தார்.

இந்த மையத்தில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு காவல் துறையினர் பணியில் இருப்பர். இந்த மையத்திற்கு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை விண்ணப்பதாரர்கள் நேரில் வந்து தங்களுக்குள்ள சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளலாம். மேலும் 94454 65964, 94981 23878, 94981 15148 என்ற செல்போன் எண்களில் தொடர்பு கொண்டு சந்தேகங்களை கேட்கலாம்.

பொது அறிவிப்பு

1 பிப்ரவரி 2018 அன்று 00.01 மணியிலிருந்து தற்போதுள்ள ''ப்ரீ டு ஏர்'' (எப்டிஏ) சேனலாக உள்ள ''ஜீ தமிழ்'' பே சேனலாக மாற்றப்பட்டுள்ளது என்று இந்தியா முழுவதும் உள்ள டிஜிட்டல் அட்ரசபிள் கேபிள் சிஸ்டம்ஸ் (டிஏசிஎஸ்) /டைரக்ட் டூ ஹோம் (டிடிஎச்) /ஹெட் என்ட் இன் தி ஸ்கை (எச்ஐடிஎஸ்) மற்றும் இன்டர்நெட் ப்ரோடோகால் டிவி (ஐபிடிவி) உள்பட அனைத்து டிஜிட்டல் அட்ரசபிள் பிளாட்பார்ம்களில் உள்ள அனைத்து பார்வையாளர்கள்/சம்பந்தப்பட்ட நபர்கள்/நிறுவனங்கள்/வினியோக தளங்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

''ஜீ தமிழ்'' பே சேனலுக்கு ஏ–லா–கார்டே ரேட் ஒரு சந்தாதாரருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.5.25– மற்றும் பொருந்தக்கூடிய வரிகள்.

டிராய் ஒழுங்குமுறைகளின்படி இந்த பொது அறிவிப்பினை கவனத்தில் கொள்ளுமாறு அனைத்து சம்பந்தப்பட்டவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ZEE Extraordinary Together

வெளியீடு:
ஜீ எண்டர்டெயின்மெண்ட் என்டர்பிரைசஸ் லிமிடெட்
18வது தளம், ஏ விங், மாரத்தான் பியூச்சர்ஸ், N.M. ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை–400 013

VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN21P 9001	AL TUSKER SUPER 2214 FBT	2005
2.	TN20AB 1040	AL TUSKER SUPER 2214 FBT	2005
3.	TN22DB 4982	TATA INDICA V2-P	2015
4.	TN22BE 5187	TATA SUMO VICTA-P	2009
5.	TN22CX 2972	TATA ACE	2011
6.	TN07BJ 6561	INDICA V2 DLS BS 3 DIESEL 5 SEATER	2010
7.	TN07AP 7148	JCB 3DX	2007

CONTACT : 044 22264641/42

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
வெப்சைட்: www.eihassociatedhotels.in

அறிவிப்பு

இதர அலுவல்களுக்கு இடையே 31 டிசம்பர், 2017ல் முடிந்த காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 31 ஜனவரி 2018 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

தேதி: 29 டிசம்பர் 2017
இடம்: கொல்கத்தா

TVS SRICHAKRA LIMITED
TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.
NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafide holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER	CERT_ NO	FR_DIST NO	TO_DIST NO	SHARES
12241	MR V SUBBURAJ	12345	620551	620600	50

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates . Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificates in favour of the registered holder.

Place: CHENNAI
Date : 29/12/2017

TVS SRICHAKRA LIMITED
P.Srinivasan
SECRETARY

TVS SRICHAKRA LIMITED
TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.
NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafide holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.

FOLIO NO.	NAME OF THE SHARE HOLDER	CERT_ NO	FR_DIST NO	TO_DIST NO	SHARES
27358	MR K R RAMAMURTHY	118048	5362100	5362145	46

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates . Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificates in favour of the registered holder.

Place: CHENNAI
Date : 29/12/2017

TVS SRICHAKRA LIMITED
P.Srinivasan
SECRETARY